Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 181 | உள்ளூர் - 30.06.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 181 | வெளியூர் - 01.07.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**ஜூலை மாதம் எப்படி இருக்கும்?** | **பி.எஸ்.என்.எல். 100 காலியிடங்கள்!** | **ஜூலை 1 முதல் புதிய மாற்றங்கள்..!** | **தயாளு அம்மாள் மருத்துவமனையில் அனுமதி!**

## மத்திய அரசு செயலாளர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை!



புதுடெல்லி, ஜூன். 30–

அனைத்து மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் செயலாளர்கள் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நடக்கிறது. இதில் சீர்திருத்த நடவடிக்கைகள் உள்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து செயலாளர்களுடன் பிரதமர் ஆலோசனை நடத்து கிறார். சில செயலாளர்கள், தங்கள் அமைச்சகங்களின் செயல்பாடுகள் மற்றும் சீர்திருத்தங்களின் முன்னே ற்றம் குறித்து விளக்கம் அளிக்கிறார்கள். நாட்டு மக்களின் வாழ்க்கையை எளிதாக்கவும், வர்த்தகம் செய்வதை எளிதாக்கவும் அடுத்த தலைமுறை சீர்திரு த்தங்களை அமல்படுத்த மோடி அரசு விரும்புகிறது. அதுபற்றி பிரதமர் ஆய்வு செய்கிறார். நிர்வாகத்தில் கவனம் செலுத்துவதுடன், அரசுப்பணியில் நிலுவை இருக்கக்கூடாது என்றும் அவர் அறிவுரை கூறுவார் என்று தெரிகிறது.

## இந்திய ராணுவத்தில் பணியாற்றியது பாக்கியம்; பணி நிறைவு விழாவில் தலைமை தளபதி நெகிழ்ச்சி!



புதுடில்லி, ஜூன். 30–

40 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய ராணுவத்தில் பணியாற்றியது என் வாழ்வின் மிகப்பெரிய பாக்கியமாகும் என பணிநிறைவு விழாவில் ஓய்வு பெறும் ராணுவத் தலைமைத் தளபதி உபேந்திர திவேதி தெரிவித்தார்.

இது குறித்து பணிநிறைவு விழாவில் அவர் பேசியதாவது: இன்று, ராணுவத் தலைமைத் தளபதியாக எனது பதவிக்காலம் நிறைவடையும் வேளையில் நான் நன்றியு ணர்வு, பெருமிதம் மற்றும் மனநிறைவுடன் இருக்கிறேன். சைனிக் பள்ளியிலிருந்து இந்த நிலை வரை நான் மேற்கொண்ட பயணம் மறக்க முடியாத ஒன்றாகும். 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய ராணுவத்தில் பணியாற்றியது என் வாழ்வின் மிகப்பெரிய பாக்கியமாகும்.

இந்திய ராணுவம் தனது வலிமையை எந்தவொரு தனிநபரிடமிருந்தும் பெறுவதில்லை; மாறாக, அதன் வீரர்கள், தளபதிகள், முன்னாள் ராணுவத்தினர், அவர்களது குடும்பத்தினர் மற்றும் நாட்டு மக்களின் நம்பிக்கை ஆகியவற்றி லிருந்தே அந்த வலிமையைப் பெறுகிறது. முதலாவதாக கடமையாற்றும் போது தங்கள் இன்னுயிரை ஈந்தவ ர்கள் உட்பட, இந்திய ராணு வத்தின் ஒவ்வொரு வீரரு க்கும் எனது மரியாதையைச் செலுத்துகிறேன்.

எங்கள் வீரர்கள் மலைகள், பாலைவனங்கள், பனிப்பா றைகள், காடுகள் மற்றும் சவாலான எல்லைப் பகுதிகள் என எத்தகைய சூழலிலும் நாட்டைப் பாதுகாத்து வருகின்றனர். எந்தவொரு தளபதியின் உண்மையான வலிமையும் அந்த வீரரிடமே உள்ளது. வீரர்களின் அர்ப்பணிப்பு, துணிச்சல் மற்றும் ஒழுக்கம் ஆகியவையே இந்திய ராணுவத்தின் அடையாளம். பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் வீரர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

ஐநா சபையின் பணிக ளிலும், இயற்கை பேரிடர் மீட்பு நடவடிக்கைகளிலும் இந்திய ராணுவம் ஆற்றிய சிறப்பான செயல்பாடுகள் மூலம், உலக அளவில் இந்தியாவுக்குப் பெரும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. காங்கோவின் அடர்ந்த காடுகளாக இருந்தாலும் சரி, அல்லது நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வெனிசுலா பகுதியாக இருந்தாலும் சரி, ராணுவம் தனது சேவையின் மூலம் தனது நற்பெயரைக் கட்டிக்காத்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டு களாக, இந்திய ராணுவம் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறது. இதற்கு ஆப்பரேஷன் சிந்தூர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறு உபேந்திர திவேதி கூறினார்.

## ஹார்முஸ் பதற்றம்: தோஹா பேச்சுவார்த்தையில் தொடரும் குழப்பம்!



வாஷிங்டன், ஜூன். 30–

அமெரிக்கா – ஈரான் இடையே கத்தார் தலைநகர் தோஹாவில் நடைபெறவி ருந்த அமைதிப் பேச்சுவா ர்த்தை குறித்து இரு நாட்டுத் தலைமைகளும் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளதால் குழப்பம் நீடிக்கிறது.

**டிரம்ப்**

வாஷிங்டனில் செய்தியா ளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் டிரம்ப், ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்து கத்தார் தலைநகர் தோஹாவில் ஜூலை 1 ஒரு முக்கியக் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவித்தார்.

ஈரான் அணு ஆயுதங்களை வைத்திருப்பதை அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது என்றும், இதற்கு ஈரானும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் டிரம்ப் குறிப்பிட்டார்.

மேலும், ஈரானே முன்வந்து இந்தப் பேச்சுவார்த்தைக்குக் கோரிக்கை விடுத்ததாகவும், இதனால்தான் தோஹாவில் இருதரப்புக் கூட்டம் நடைபெறுகிறது என்றும் டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

**ஈரான் மறுப்பு**

அதிபர் டிரம்பின் இந்த அறிவிப்பை ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பகாஹி திட்ட வட்டமாக மறுத்துள்ளார்.

வரும் நாட்களில் அமெ ரிக்காவுடன் எந்தவொரு மட்டத்திலும் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் ஈரான் அரசிடம் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஈரான் குழு இந்த வாரம் கத்தாருக்கு பயணம் மேற்கொள்வது உண்மை தான் என்றாலும், அதற்கும் அமெரிக்க அதிகாரிகளின் வருகைக்கும் எந்தத் தொட ர்பும் இல்லை என்றும் இதனை இருதரப்புப் பேச்சுவார்த்தை யாக கருத முடியாது என்றும் அவர் விளக்கமளித்தார்.

**பேச்சுவார்த்தை**

அமைச்சகம் மறுத்த போதிலும், பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த ஈரானிய அதிகாரி ஒருவர் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் பேசுகையில், தோஹாவில் பேச்சுவார்த்தை நடப்ப தற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் குறிப்பிட்டு ள்ளார். இந்தப் பேச்சுவார்த்தை யானது , ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் நிலவும் பதற்ற த்தைக் குறைப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டி ருக்கும் என அவர் கூறினார்.

எனவே நாளை அமெரிக்க மற்றும் ஈரானிய குழு, கத்தார் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் மத்தியஸ்தர்கள் மூலம் தனித்தனியாகச் சந்தித்துப் பேச வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

அமெரிக்கா தரப்பில் அதிபரின் சிறப்புப் பிரதிநிதி ஸ்டீவ் விட்காப் மற்றும் டிரம்பின் மருமகன் ஜாரெட் குஷ்னஆகியோர் இந்த அமெரிக்கக் குழுவிற்குத் தலைமை தாங்குவார்கள் எனத் தகவல் வெளியாகி யுள்ளது.

## திருச்சி கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிடமாட்டேன் - நடிகர் ராகவா லாரன்ஸ்!




சென்னை, ஜூன். 30–


திருச்சி கிழக்கு இடைத் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என நடிகர் ராகவா லாரன்ஸ் விளக்கமளித்துள்ளார்.

திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிடுவது தர்மமில்லை. எடுத்துக்காட்டிற்காக நாயை குறிப்பிட்டு பேசியதை சர்ச்சையாக்கி விட்டார்கள். அரசியலுக்கு வர மக்களிடம் ஏன் கேட்க வேண்டுமென சிலர் பேசுகின்றனர் என்று நடிகர் ராகவா லாரன்ஸ் கூறியுள்ளார்.

## 40 ஆண்டு சரிவில் ஜப்பான் யென்..!

# இறக்குமதி சந்தைக்கு ஜாக்பாட்: இந்தியாவுக்குக் காத்திருக்கும்

## டைம் பாம்..!!



புதுடெல்லி, ஜூன். 30–

உலகளவில் வர்த்தக சந்தை தலைகீழாக மாறியிருக்கும் வேளையில், இன்று நாணய சந்தையில் முக்கிய நிகழ்வாகவும், அதேவேளையில் அதிர்ச்சி அளிக்கும் விதமாக ஜப்பான் நாட்டின் நாணயமான யென் மதிப்பு டாலருக்கு எதிராக சுமார் 40 வருட குறைவான அளவை எட்டியுள்ளது.

இதன் மூலம் 1986ஆம் ஆண்டு பதிவான நிலையில் தற்போது ஜப்பான் யென் உள்ளது. இன்றைய வர்த்தகத்தில் டாலருக்கு எதிராக ஜப்பான் யென் மதிப்பு 162.19 ஆகப் பதிவாகியுள்ளது. இதனால் யென் மதிப்பின் சரிவைக் கட்டுப்படுத்த ஜப்பான் அரசும், மத்திய வங்கியும் அதிரடியான நடவடிக்கை எடுக்கும் எனச் சந்தையில் கருத்து நிலவுகிறது.

இதை உறுதி செய்யும் வகையில் ஜப்பான் நாட்டின் நிதியமைச்சரான Satsuki Katayama, அரசு யென் பதிப்பின் சரிவைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கையை எடுக்கும் எனச் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார். இதன் மூலம் சர்வதேச பங்குச்சந்தையுடன் இந்தியச் சந்தையும் கூடுதல் எச்சரிக்கை உடன் உள்ளது.

ஜப்பான் அரசும் மத்திய வங்கியும் யென் மதிப்பைக் கட்டுப்படுத்த வட்டி விகிதத்தை உயர்த்தினால் முதலீட்டுச் சந்தையில் பெரும் மாற்றம் நடக்க வாய்ப்புள்ளது, இது இந்தியச் சந்தையை மறைமுகமாகப் பாதிக்கும் என்பதால் முதலீட்டாளர்கள் கூடுதல் அச்சத்துடன் உள்ளனர். சரி ஜப்பான் யென் சரிவால் இந்தியாவுக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்..?

உண்மையில் ஜப்பான் யெனின் 40 ஆண்டுக்கால சரிவு மூலம் இந்தி யாவுக்கு நன்மையும் உடன், பாதிப்பும் உண்டு.

**பங்குச்சந்தையில் பெரும் பாதிப்பு:**

பலருக்கும் யென் கேரி டிரேட் பற்றி தெரிந்திருக்கும். அதாவது யென் மதிப்பு குறைவாக இருப்பதாலும், ஜப்பான் நாட்டில் வட்டி குறைவாக இருப்பதாலும் ஜப்பான் மக்களும், வெளிநாட்டவர்களும் யென் நாணயத்தில் கடன் வாங்கி அதிக லாபம் தரும் அமெரிக்கா பங்குச்சந்தை, இந்தியப் பங்குச்சந்தையில் முதலீடு செய்வது வழக்கம்.

இத்தகைய சூழ்நிலையில் யென் மதிப்பைக் கட்டுப்படுத்த ஜப்பான் மத்திய வங்கி வட்டியை உயர்த்தினால் யென் நாணயத்தில் கடன் வாங்கி முதலீடு செய்தோருக்கான லாபம் குறையும். இதனால் பங்குச்சந்தையில் முதலீடுகளை விற்று யென் கடனை முதலீட்டாளர்கள் அடைப்பார்கள்.

இதனால் யென் மதிப்பு சரிவு பங்குச்சந்தையிலும், நாணய சந்தையிலும் பணப்புழக்க பாதிப்பை உருவாக்கும். இதனால் பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்களுடைய முதலீட்டை வெளியேற்றுவார்கள் இதன் இந்தியச் சந்தையை நேரடியாகச் சிறிய அளவில் மட்டுமே பாதிக்கும், ஆனால் மறைமுக அதாவது அமெரிக்க, பிரிட்டன் சந்தையின் மூலம் ஏற்படும் பாதிப்பு மூலம் இந்தியச் சந்தையிலிருந்து அதிகப்படியான முதலீடுகளை FII வெளியேற வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இதுதான் இந்தியச் சந்தைக்கு டைம் பாம், ஜப்பான் மத்திய வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தும் வரையில் இந்த டைம் பாம் காத்திருக்கும், வட்டியை உயர்த்திய உடன் இது முதலீடுகள் வெளியேறத் துவங்கும்.


**இறக்குமதி சந்தைக்கு ஜாக்பாட்:**

இந்திய ஆட்டோமொபைல் சந்தையில் ஜப்பான் தயாரிப்பு பொருட்கள் அதிகளவில் இறக்குமதி செய்யப்படும் காரணத்தால், யென் மதிப்பு குறைந்தது இந்திய இறக்குமதியாளர்களுக்கு ஜாக்பாட் ஆக மாறுகிறது. குறிப்பாக EV மற்றும் ஹைப்ரிட் வாகனங்களை அதிகளவில் தயாரிக்கும் மாருதி சுசூகி நிறுவனத்திற்குச் சாதகமாக அமையும், இப்பிரிவின் பெரும்பாலான பொருட்கள் ஜப்பானில் இருந்து தான் வருகிறது.

இதுமட்டும் அல்லாமல் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் உதிரிப்பாகங்கள், சிறப்பு ஸ்டீல் ஆகியவை தற்போது மலிவான விலைக்குக் கிடைக்கும்.

இறுதியாக ஜப்பான் நாட்டிற்குச் சுற்றுலா செல்ல திட்டமிடும் மக்களுக்கு குறைந்த செலவில் சென்று வருவதற்கான வாய்ப்புகள் யென் மதிப்பு சரிவால் ஏற்பட்டு உள்ளது. இதேபோல் ஜப்பானில் படிக்கும் மாணார்களுக்கும் இது சிறப்பான காலகட்டம்.

## திமுக ஆட்சியில் அனைத்திலும் கட்டிங்... கமிஷன்... கரப்ஷன் - வைகோ ஆவேசம்!



செங்கல்பட்டு, ஜூன். 30–

செங்கல்பட்டில் மதிமுக பொதுச்செயலாளர் செய்தி யாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் அனைத்திலும் கட்டிங்... கமிஷன்... கரப்ஷன் என்று கூறினார்.

அப்போது அவரிடம், கூட்டணியில் இருந்தபோது ஏன் எதிர்த்து பேசவில்லை என நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதனால் கோபமடைந்த வைகோ, கூட்டணியில் இருந்துகொண்டே எப்படி எதிர்ப்பது என கூட்டணி தர்மம் குறித்து விளக்கினார்.

மேலும், கேள்வி கேட்ட நிருபரை வைகோ மற்றும் மதிமுக நிர்வாகிகள் வெளியே அனுப்பினர்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் காவல்துறை அதிகாரிகள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சு.மணிவாசன், காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 30.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 16-ம் தேதி


# உங்ககிட்ட ஸ்கில் இருக்கு ஆனா டிகிரி இல்லையா!




நாளுக்கு நாள் தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனால் வேலை வாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்களும் தொடர்ந்து பணிநீக்கம் செய்து வருகின்றன. கம்ப்யூட்டரே கம்ப்யூட்டர் வேலைகளை எல்லாம் பார்த்துக் கொள்வதால் மனிதத் தலையீடு குறையத் தொடங்கியுள்ளது. முன்பெல்லாம் ஏதேனும் ஒரு கல்லூரியில் படித்து டிகிரி சான்றிதழும், 10 மற்றும் 11ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழையும் மட்டுமே நம்பி பணியமர்த்திய நிறுவனங்கள் இன்று முற்றிலும் மாறுபட்ட வழியில் ஊழியர்களை தேர்ந்தெடுக்கின்றனர்.

டிகிரியை விட திறமைக்கே முன்னுரிமை: இந்தியாவில் உள்ள பல நிறுவனங்கள் தற்போது டிகிரியை பார்ப்பதை நிறுத்தி வருகின்றன. மாணவர்களை தேர்ந்தெடுக்கும் போது அவர்களிடம் முறையான ஸ்கில் செட் இருக்கிறதா? பணியமர்த்தப்படும் நிறுவனம் என்ன செய்கிறது என்பது குறித்த பரீட்சையம் இருக்கிறதா? என்பதைத் தான் முதலில் பார்க்கின்றன. பட்டப்படிப்பு என்பது ஒவ்வொருவருக்கும் அடிப்படையான அறிவை வழங்குகிறது என்பது உண்மைதான். ஆனால் ஒரு ஊழியருக்கு உண்மையிலேயே திறமை தான் முக்கியம் என்பதை இன்றைய பணி அமர்த்தும் செயல்முறை நமக்கு உணர்த்துகிறது.


அதிலும் சில நிறுவனங்கள் வெளிப்படையாக டிகிரி தேவையில்லை உங்களுக்கு கோடிங் தெரிந்தால் போதும்.. உங்களிடம் நாங்கள் எதிர்பார்க்கும் ஸ்கில்செட் இருந்தால் போதும் என்று ஒப்பனாக கூறுகின்றன. எனவே இனிவரும் காலங்களில் இளம் வயதில் இருந்தே டிஜிட்டல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றார் போல் திறன்களை வளர்த்தே ஆக வேண்டிய நிலையில் தான் இன்றைய இளம் பட்டதாரிகள் உள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இதற்கு முன்பிருந்த படித்த பட்டதாரிகளே கேள்விப்படாத முக்கியமான திறன்கள் உருவாகியுள்ளன. ஒன்று ஏஐ சார்ந்த திறமை இருக்கிறதா என்று நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. மற்றொன்று எந்த நெருக்கடியான சூழல் வந்தாலும் அதை திறமையாக கையாளும் பண்பு. இப்படி நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள் இருந்தால்தான் IT நிறுவனங்களில் ஒரு வேலையையே பெற முடிகிறது.

முன்பெல்லாம் ஐடி சார்ந்த டிகிரி முடித்து விட்டால் லைப் செட்டில் என்று நினைத்து வந்த இளைய தலைமுறையினருக்கு ஆர்டிபிசியல் இன்டெலிஜென்ஸ் தொழில்நுட்பம் பிரச்சனையாய் மாறியிருக்கிறது. ஒருபுறம் அது வேலை வாய்ப்புகளை அதிகரித்தாலும் மறுபுறம் ஒரு சில தினசரி அடிப்படையில் செய்யக்கூடிய வேலைவாய்ப்புகளை குறைத்து வருகிறது என்பதே நிதர்சன உண்மை.

ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் தொழில்நுட்பம் தற்போது அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. உலகளவில் AI வேலை வாய்ப்புகளில் 20.5 சதவீத நபர்கள் இந்தியாவில் பணியமர்த்தப்படுகின்றனர். 280% ஏஐ ட்ரைனர் பணிகள் உலகளவில் இருந்து வருகிறது. ஆனால் அதற்கும் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன் தேவைப்படுகிறது. AI தொழில்நுட்பம் எந்த அளவுக்கு வேலை வாய்ப்புகள் குறைகிறதோ? அதேபோல வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் செய்கின்றன. ஆனால் அதற்கு ஏற்ற திறன் பற்றாக்குறை ஊழியர்கள் மத்தியில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. எனவே மாணவர்களும் இது போன்ற புதிய திறன்களை தொடர்ந்து கற்றுக் கொண்டால் IT நிறுவனங்கள் அவர்களை அதிக சம்பளத்தில் பணியமர்த்தும் என்பதில் ஐயமில்லை.

# சென்னை-பெங்களூரு புல்லட் ரயில் திட்டம்! விரைவில் பணிகள் தொடக்கம்..!!




சென்னை, ஜூன். 30–

மத்திய அரசு சென்னை , பெங்களூரு இடையிலான புல்லட் ரயில் திட்டத்துக்கு அனுமதி தந்தது. இந்த திட்டம் நடைமுறைக்கு வந்தால் சென்னை–பெங்களூருஇடையே 73 நிமிடங்களிலும் பயணிக்க முடியும் என மத்திய அரசு கூறுகிறது. சென்னை– பெங்களூரு புல்லட் ரயில் சென்னை சென்டிரலில் தொடங்கி பூந்தமல்லி, பரந்தூர்,சித்தூர், கோலார் வழியாக பெங்களூருவின் பையப்பனஹள்ளி மற்றும் ஒயிட்பீல்டு ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் அமைய இருக்கிறது. இதில் பெங்களூரு நகரில் ஒயிட்பீல்டு முதல் பையப்பனஹள்ளி வரை சுமார் 12 கி.மீ தூரத்திற்கு நிலத்தடி சுரங்கப்பாதை வழியாக ரயில் இயக்கப்பட உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இதன் மூலம் மக்களின் பயண அனுபவம் மேம்படும் மற்றும் இந்த இரு நகரங்களிலும் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக பெங்களூரு ஐடி நகரமாகவும் சென்னை உற்பத்தி நகரமாகவும் இருப்பதால் இந்த புல்லட் ரயில் திட்டம் இரு நகரங்களின் வளர்ச்சியை இன்னும் மேம்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

சென்னை–பெங்களூரு புல்லட் ரயில் மணிக்கு 320 முதல் 350 கி.மீ வரையிலான வேகத்தில் இயங்கக்கூடியவகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 306 கி,மீ நீளத்துக்கு புல்லட் ரயில் செல்வதற்கான ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது. தமிழ்நாட்டில் இந்த திட்டத்தில் சென்னை சென்ட்ரல், பூந்தமல்லி மற்றும் பரந்தூர் ஆகிய இடங்களில் ரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. நேஷனல் ஹை ஸ்பீட் ரயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (NHSRCL) புல்லட் ரயில் திட்டத்தில் சென்னை – பெங்களூரு வழித்தடத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளது. இதற்கான வடிவமைப்பு, சுரங்கப்பாதை, ரயில் நிலையங்கள் ஆகியவற்றுக்கான ஒப்பந்த ப்புள்ளிகளை கோரி இருக்கிறது. சென்னை, பையப்பனஹள்ளி மற்றும் ஒயிட்பீல்டு ஆகிய பகுதிகளில் அமைய இருக்கும் ரயில் நிலையங்களுக்கான வடிவமைப்புகளை வழங்க இந்த ஒப்பந்த புள்ளியின் மூலம் நிறுவனம் தேர்வு செய்யப்படும். இந்த நிறுவனம் ஆய்வு செய்து வடிவமைப்பினை வழங்கும். இதன் அடிப்படையில் தான் கட்டுமான பணிகள் தொடங்கும்.

மும்பை – அகமதாபாத்தை தொடர்ந்து NHSRCL அமைப்பு சென்னை – பெங்களூரு இடையிலான புல்லட் ரயில் திட்ட பணிகளை தொடங்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2030ஆம் ஆண்டுக்குள் இதனை பயன்பாட்டுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. இந்த திட்டம் வந்துவிட்டால் சென்னை மக்கள் பெங்களூருவுக்கும் , பெங்களூரு மக்கள் சென்னைக்கும் வந்து செல்ல விமான சேவையே தேவைப்படாது. ஏனெனில் அந்த நேரத்திற்குள் புல்லட் ரயிலேலே பயணம் செய்து விடலாம்.

# சி.பி.எஸ்.இ. மாணவர்களுக்கு மேஜர் அப்டேட்!!




புதுடெல்லி, ஜூன். 30–

இந்தியாவில் லட்சக்கணக்கான மாணவர்கள் CBSE பள்ளிகளில் படிக்கின்றனர். மத்திய அரசின் கீழ் செயல்பட கூடிய CBSE அமைப்பு தான் இந்த பள்ளிகளை நிர்வகிக்கிறது. புதிய கல்விக் கொள்கையின் படி, 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை மும்மொழி பாடம் அறிமுகப்படுத்தப்படும் என மே மாதம் அறிவிக்கப்பட்டது. தற்போது இருமொழி திட்டத்தின் கீழ் உள்ளூர் மாநில மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இனி 3–வது மொழியாக ஏதாவது ஒரு இந்திய மொழியை கற்க வேண்டும் என்றும் இந்த ஆண்டில் இருந்தே 6ஆம் வகுப்பிலும், 9ஆம் வகுப்பிலும் மும்மொழிக் கொள்கை அறிமுகப்படுத்தப்படும் என்று கூறப்பட்டது. 9ஆம் வகுப்பில் இந்த ஆண்டே மும்மொழித் திட்டத்தை செயல்படுத்த கடும் எதிர்ப்பு கிளம்பியது.

குறிப்பாக 10ஆம் வகுப்பு பொது தேர்வு எழுதும் மாணவர்களுக்கு பெரிய குழப்பம் ஏற்பட்டது. பெற்றோரும் தெளிவு கிடைக்காமல் குழம்பி போயினர். இந்நிலையில் சிபிஎஸ்இ அமைப்பு லட்சக்கணக்கான மாணவர்களின் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தெளிவான வழிகாட்டுதல்களை தற்போது வெளியிட்டுள்ளது. இதன்படி இந்தப் புதிய முறை என்பது நடப்பாண்டில் பத்தாம் வகுப்பு பயிலக்கூடிய மாணவர்களுக்கு பொருந்தாது என விளக்கம் தந்திருக்கிறது.

அதாவது மூன்றாவது மொழிப்பாடம் கட்டாயம் என்பது இந்த ஆண்டில் 10ஆம் வகுப்பு பயின்று தேர்வு எழுத போகும் மாணவர்களுக்கு பொருந்தாது என விளக்கம் தந்துள்ளது. தற்போது 7, 8 மற்றும் 9–ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள், 10–ஆம் வகுப்புக்குச் செல்லும்போது 'மூன்றாவது மொழி'க்கான போர்டு தேர்வை எழுத வேண்டியதில்லை என சிபிஎஸ் விளக்கம் தந்துள்ளது. ஏற்கனவே இரண்டு அந்நிய மொழிகளைத் தேர்ந்தெடுத்த மாணவர்கள் அவற்றையே தொடர்ந்து பயில அனுமதிக்கப்படுவார்கள்; இருப்பினும், அவர்கள் கூடுதலாக ஒரு இந்திய மொழியையும் கட்டாயம் பயில வேண்டும் என அறிவித்துள்ளது. மேலும் திருத்தப்பட்ட மொழி பாடத் திட்டத்திற்கான, வகுப்புக்கு ஏற்ற புத்தகங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வழங்கப்படும் என சிபிஎஸ்இ தெரிவித்துள்ளது. மொழி கற்றலை அர்த்தமுள்ளதாகவும், சுவாரஸ்யமானதாகவும், மாற்றி, மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு பங்களிப்பதே இக்கொள்கையின் நோக்கம் என விளக்கம் தந்துள்ளது. இந்த புதிய விதிமுறை தற்போது 6ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நடைமுறைக்கு வரும் இவர்கள் 7,8,9,10ஆம் வகுப்பு செல்லும் போது படிப்படியாக அந்த வகுப்புகளுக்கும் நடைமுறைக்கு வரும் என்கின்றனர் அதிகாரிகள். எனவே இந்த ஆண்டு 7,8,9,10ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் மத்தியில் நீடித்த குழப்பம் முடிவுக்கு வந்துள்ளது.



# 2026: உங்க ராசியை சொல்லுங்க.. ஜூலை மாதம் எப்படி இருக்கும்?



ஒவ்வொரு மாதமும் கிரகங்களின் நிலைகளைப் பொறுத்து பலன்கள் வேறுபடும். அந்த வகையில் 2026 ஆம் ஆண்டின் ஏழாவது மாதமான ஜூலை மாதத்தில் நிகழும் கிரக பெயர்ச்சிகளால், பல மங்களகரமான மற்றும் சுப யோகங்கள் உருவாகவுள்ளன. இந்த யோகங்களால் ஜூலை மாதமானது மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிக்காரர்களின் வாழ்க்கையில் எதிர்பாராத பல மாற்றங்களைக் கொண்டு வரப்போகிறது. உங்களுக்கு 2026 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் எப்படி இருக்கப் போகிறது என்பதை தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளதா? கீழே 12 ராசிக்காரர்களும் ஜூலை மாதத்தில் எந்த மாதிரியான பலன்களைப் பெறப் போகிறார்கள் என ஜூலை மாத ராசிப்பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**மேஷம்;**

மேஷ ராசிக்காரர்களே! ஜூலை மாதத்தின் தொடக்கம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். தொழிலில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும். பணியிடத்தில் உயர் அதிகாரிகளின் முழு ஆதரவு கிடைக்கும். தொழிலதிபர்கள் புதிய ஒப்பந்தங்களால் நல்ல லாபத்தைப் பெறுவார்கள். காதல் வாழ்க்கையில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நிதி நிலைமை வலுவடையும். இருப்பினும் திட்டமிட்டு செலவுகளை செய்ய வேண்டும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை நன்றாக இருக்கும்.

**ரிஷபம்;**

ரிஷப ராசிக்காரர்களே! ஜூலை மாதத்தில் குடும்ப விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும். அதேப் போல் பண விஷயத்திலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். பணிபுரிபவர்களுக்கு அலுவலகத்தில் பொறுப்புக்கள் அதிகரிக்கும். காதல் வாழ்க்கை இனிமையாக இருக்கும். முதலீடு செய்வதற்கு இம்மாதம் சிறந்ததாக இருக்கும். இருப்பினும் நிபுணர்களின் ஆலோசனையைப் பெற வேண்டும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்க உணவு வழக்கத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மிதுனம்; மிதுன ராசிக்காரர்களே! ஜூலை மாதத்தில் முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். வேலை, தொழிலில் நல்ல வளர்ச்சியைக் காண்பீர்கள். காதல் வாழ்க்கை இனிமையாக இருக்கும். நல்ல நிதி ஆதாயங்கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது. பயணங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும். மன அமைதி அதிகரிக்கும்.

**கடகம்;**

கடக ராசிக்காரர்களே! ஜூலை மாதம் நிதி ரீதியாக சாதகமாக இருக்கும். குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி பெருகும். நீண்ட கால கடின உழைப்புக்கான பலன் கிடைக்கும். காதலித்து வந்தால் அன்புக்குரியவர்களுடன் அன்பு அதிகரிக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும் வாய்ப்புள்ளது. ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆனால் இம்மாதத்தில் மன அழுத்தம் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

**சிம்மம் :**

சிம்ம ராசிக்காரர்களே! ஜூலை மாதமானது வெற்றிகள் குவியும் மாதமாக இருக்கும். சமூகத்தில் உங்களின் கௌரவம் அதிகரிக்கும். பணிபுரிபவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. வியாபாரிகளுக்கு தங்கள் வியாபாரத்தை விரிவாக்கம் செய்யும் வாய்ப்புக்கள் கிடைக்கும். காதல் வாழ்க்கை இனிமையாக இருக்கும். நல்ல நிதி ஆதாயங்கள் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

**கன்னி :**

கன்னி ராசிக்காரர்களே! ஜூலை மாதத்தில் நிலுவையில் உள்ள வேலைகள் வெற்றிகரமாக முடிவடையும். தொழில் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். வியாபாரத்தை திட்டுமிட்டு செய்தால், நல்ல பலன்களைப் பெறுவீர்கள். காதல் மற்றும் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். நிதி நிலைமை மேம்படும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, செரிமான பிரச்சனைகளை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல், உடனே மருத்துவரை அணுகுங்கள்.

**துலாம் :**

துலாம் ராசிக்காரர்களே! ஜூலை மாதத்தில் பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். காதல் வாழ்க்கை ரொமான்டிக்காக இருக்கும். பணியிடத்தில் புதிய பொறுப்புக்களோ அல்லது பதவி உயர்வோ கிடைக்கும் வாய்ப்புள்ளது. நிதி ரீதியாக சிறப்பாக இருக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

விருச்சிகம் :விருச்சிக ராசிக்காரர்களே! ஜூலை மாதம் முக்கிய முடிவுகளை எடுக்க சாதகமாக இருக்கும். தொழிலில் நல்ல வெற்றி கிடைக்கும். வியாபாரிகளுக்கு கூட்டு தொழில் செய்வதற்கான வாய்ப்புக்கள் தேடி வரும். காதல் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். நல்ல நிதி ஆதாயங்கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, வழக்கமான பரிசோதனைகளை தவறாமல் செய்துவிடுங்கள்.

**தனுசு:**

தனுசு ராசிக்காரர்களே! ஜூலை மாதமானது தொழில், கல்வி ரீதியாக மங்களகரமானதாக இருக்கும். வேலையில் முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். காதல் வாழ்க்கையில் ஒரு நல்ல மாற்றத்தைக் காண்பீர்கள். நிதி நிலைமை மேம்படும். மாணவர்கள் போட்டி தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள்.

**மகரம் :**

மகர ராசிக்காரர்களே! ஜூலை மாதத்தில் உங்கள் கடின உழைப்பு மற்றும் ஒழுக்கத்தின் மூலம் நல்ல வெற்றியைப் பெறுவீர்கள். பணியிடத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். அதே சமயம் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். காதல் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். ஆனால் பண பரிவர்த்தனைகளில் மிகவும் கவனமாக இருக்க அறிவுறுத்தப்படுகிறது. ஆரோக்கிய பிரச்சனைகளுக்காக ஓய்வு எடுக்க வேண்டியிருக்கும்.

**கும்பம்:**

கும்ப ராசிக்காரர்களே! ஜூலை மாதம் ஒரு சிறப்பான மாதமாக இருக்கும். தொழிலதிபர்களுக்கு தங்கள் தொழிலை விரிவுபடுத்துவதற்கான புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். காதல் வாழ்க்கை இனிமையாக இருக்கும். நல்ல நிதி ஆதாயங்கள் கிடைக்கும். சமூகத்தில் உங்களின் பெயரும், புகழும் அதிகரிக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

**மீனம் :**

மீன ராசிக்காரர்களே! ஜூலை மாதத்தில் ஆன்மீகத்தில் ஆர்வம் அதிகரிக்கும். காதல் உறவுகளில் நெருக்கம் அதிகரிக்கும். தொழிலில் பொறுமையைக் கிடைப்பிடித்தால், நல்ல வெற்றி கிடைக்கும். பண விஷயங்களில் சற்று கவனமாக இருக்க வேண்டும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்க, மன அமைதியுடனும், நேர்மறை எண்ணங்களுடனும் இருக்க வேண்டும்.

# ஜூலை 1 முதல் புதிய மாற்றங்கள்...!




புதுடெல்லி, ஜூன். 30–

ஜூலை 1ஆம் தேதி முதல் இந்தியாவில் பல்வேறு முக்கியமான நிதி சம்பந்தப்பட்ட மாற்றங்கள் நடைமுறைக்கு வர இருக்கின்றன. சிலிண்டர் விலை தொடங்கி ரயில் டிக்கெட், பாஸ்போர்ட் விண்ணப்ப கட்டணம் என இந்த மாற்றங்கள் அனைத்து சாமானிய குடும்பங்களின் பட்ஜெட்டையே பதம் பார்க்க போகின்றன என்பதால் இவற்றை தெரிந்து வைத்து கொள்வது நல்லது.

**சிலிண்டர் விலை:**

தற்போது ஈரான் போர் முடிவுக்கு வந்திருக்கக்கூடிய சூழலில் அதனை அடிப்படையாகக் கொண்டு சிலிண்டர் விலை குறையுமா என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே எழுந்துள்ளது. இது ஜூலை ஒன்றாம் தேதி அன்று காலை தெரிந்துவிடும். விலை குறைந்தால் நம்முடைய பட்ஜெட்டிற்கு நல்லது , விலை கூடினாலும் மாறாமல் இருந்தாலும் நமக்கு ஏமாற்றம் தான்.

**வருமான வரி கணக்கு தாக்கல்:**

2025–26 நிதியாண்டுக்கான (மதிப்பீட்டு ஆண்டு 2026–27) வருமான வரி தாக்கல் செய்ய ஜூலை 31 ஆம் தேதி கடைசி தேதியாகும். எனவே இந்த ஜூலை மாதம் வேலைக்கு செல்லும் அனைவருக்குமே ஐடி ஆர் எனப்படும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான ஒரு மாதம். ஜூலை 31க்குள் வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய தவறினால் அபராதம் விதிக்கப்படலாம்.

**ஆதார் கார்டு:**

ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட உங்கள் மின்னஞ்சல் முகவரியை அப்டேட் செய்வதற்கான கட்டணத்தை UIDAI ரத்து செய்துள்ளது. ஜூலை 1, 2026 முதல் டிசம்பர் 31, 2026 வரை ஆதார் மொபைல் ஆப் மூலம் இதை இலவசமாகச் செய்துகொள்ளலாம். முன்பு இதற்கு ரூ. 75 கட்டணம் வசூலிக்கப்பட்டது.

**ரயில்கள்:**

இந்திய ரயில்வேயின் ஐஆர்சிடிசி இணையதளம் மேம்படுத்தப்பட்டு ஜூலை 15ஆம் தேதி முதல் நவீன வசதி கொண்ட புதிய இணையதளம் பயன்பாட்டுக்கு வர இருக்கிறது. அதே போல ரயில்களில் அபாயகரமான பொருட்களைக் கொண்டு செல்வதற்கான அபராதம் ரூ. 250இல் இருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முறையான உரிமம் இன்றி பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது பெண்களுக்கான பெட்டிகளில் அனுமதியின்றி பயணம் செய்தல் போன்ற விதிமீறல்களுக்குக் கடுமையான அபராதங்கள் விதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

**பாஸ்போர்ட் கட்டணம்:**

பாஸ்போர்ட் விண்ணப்பம் செய்வதற்கான கட்டணம் ஜூலை 1 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண மற்றும் தட்கல் விண்ணப்பங்களுக்கான சேவை கட்டணங்கள் ரூ.1000 பாய், 2000 என உயர்த்தப்படுகின்றன. எனவே நாளைக்குள் பாஸ்போர்ட் விண்ணப்பம் செய்வதால் ரூ.1000 முதல் ரூ.2000 வரை பணம் மிச்சப்படுத்த முடியும்.

ஆர்பிஐ – நிதி மோசடி தடுப்பு விதிகள்: நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் நிதி தயாரிப்புகளை தவறான முறையில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதைத் தடுக்க ரிசர்வ் வங்கி (RBI) புதிய விதிமுறைகளை அமல்படுத்துகிறது. இதனால், தவறாக வழிகாட்டப்பட்ட வாடிக்கையாளர்கள் ஜூலை 1 முதல் இழப்பீடு அல்லது பணத்தைத் திரும்பப் பெறும் உரிமையை பெறுவார்கள்.

# சினிமா துளிகள்..!

## விஜய்க்கு பிரம்மாண்ட பாராட்டு விழா?

தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள விஜய்க்கு, தமிழ் திரைப்படத் துறை சார்பில் பிரம்மாண்ட பாராட்டு விழா நடத்துவது குறித்து ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.


**2026 முதல் பாதி வசூலில் தென்னிந்திய சினிமா அசத்தல்!**

2026–ன் முதல் ஆறு மாதங்களில் தென்னிந்திய திரைப்படங்கள் வசூலில் வலுவான வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. ராம் சரண் நடித்த Peddi முன்னணியில் இருந்தாலும், தமிழில் சூர்யாவின் கருப்பு மிகப்பெரிய வெற்றியைப் பெற்று கோலிவுட்டுக்கு புதிய உற்சாகத்தை அளித்துள்ளது.


**'ஜன நாயகன்' உள்ளிட்ட சர்ச்சைகள் பேசுபொருள்**

இந்த ஆண்டின் முதல் பாதியில் ஜன நாயகன் சென்சார் விவகாரம், த்ரிஷ்யம் 3 உரிமை பிரச்சினை உள்ளிட்ட பல முக்கிய சர்ச்சைகள் தென்னிந்திய திரையுலகில் பரபரப்பை ஏற்படுத்தின.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# ஒரு நாளைக்கு எத்தனை முட்டைகள் சாப்பிட வேண்டும்?



முட்டைகள் இயற்கையின் ஒரு சிறந்த கொடையாகும். ஒரு முழு முட்டையில் சுமார் 6 கிராம் உயர்தர புரதம் உள்ளது. இதில் கார்போஹைட்ரேட் (மாவுச்சத்து) அறவே இல்லை. எனவே, உடல் எடையைக் குறைக்க விரும்புவோருக்கு இது ஒரு சிறந்த தேர்வாகும். இதுமட்டுமின்றி, முட்டையின் மஞ்சள் கருவில் மூளை வளர்ச்சி மற்றும் தசை செயல்பாட்டிற்குத் தேவையான 'கோலின்' (choline), நரம்பு மண்டலத்தைப் பாதுகாக்கும் வைட்டமின் B12 மற்றும் கண் பார்வையை மேம்படுத்தும் 'லுடீன்' (lutein) போன்ற சக்திவாய்ந்த சத்துக்கள் நிறைந்துள்ளன.

**ஒரு நாளைக்கு எத்தனை முட்டைகள் சாப்பிடலாம்?:**

ஆரோக்கியமான ஒருவர் சமச்சீரான உணவின் ஒரு பகுதியாக ஒரு நாளைக்கு ஒன்று முதல் இரண்டு முட்டைகள் வரை பாதுகாப்பாகச் சாப்பிடலாம் என்று நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். இதய ஆரோக்கியத்திற்காக தினமும் ஒரு முழு முட்டை அல்லது இரண்டு முட்டையின் வெள்ளைக்கருவைச் சாப்பிட வேண்டும் என்று 'அமெரிக்க இதயச் சங்கம்' (American Heart Association) பரிந்துரைக்கிறது. முட்டையைச் சாப்பிட்ட பிறகு நீண்ட நேரம் பசி எடுக்காமல் இருக்கும்; இது அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவதைத் தடுக்கவும், உடல் எடையை எளிதாகக் கட்டுப்படுத்தவும் உதவும்.

**கொலஸ்ட்ரால்:**

முட்டையின் மஞ்சள் கருவில் உள்ள கொலஸ்ட்ரால் ரத்தத்தில் படிந்து இதய நோயை உண்டாக்கக்கூடும் என்று முன்பு எச்சரிக்கைகள் இருந்தன. ஆனால், உணவின் மூலம் நாம் உட்கொள்ளும் கொலஸ்ட்ரால் நமது இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரால் அளவை நேரடியாகப் பாதிப்பதில்லை என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உடலுக்குத் தேவையான கொலஸ்ட்ராலை நமது கல்லீரலே தானாகவே உற்பத்தி செய்துகொள்கிறது. எனவே, முட்டையில் உள்ள கொலஸ்ட்ரால் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில், அமெரிக்காவின் உணவு வழிகாட்டுதல்களிலிருந்து பழைய எச்சரிக்கைக் குறிப்புகள் நீக்கப்பட்டுள்ளன.

**யார் கவனமாக இருக்க வேண்டும்?:**

முட்டைகள் உடலுக்கு மிகவும் நல்லது என்றாலும், ஏற்கனவே தீவிரமான இதய நோய்கள், டைப்-2 நீரிழிவு நோய் அல்லது அதிக இரத்தக் கொலஸ்ட்ரால் பிரச்சனை உள்ளவர்கள் சற்று கவனமாக இருக்க வேண்டும். அவர்கள் வாரத்திற்கு 3 முதல் 4 முட்டைகளை மட்டுமே மஞ்சள் கருவுடன் சேர்த்துச் சாப்பிட வேண்டும். அல்லது, மருத்துவர்களின் அறிவுரைப்படி, மஞ்சள் கருவை நீக்கிவிட்டு, புரதம் மட்டுமே கொண்ட வெள்ளைக்கருவை மட்டும் தாராளமாகச் சாப்பிடலாம்.


**சமைக்கும்போது இந்தச் சிறிய மாற்றத்தைச் செய்யுங்கள்:**

முட்டையின் ஆரோக்கிய நன்மைகள் நாம் அதைச் சமைக்கும் முறையையும் பொறுத்தது. முட்டையை வறுக்கும்போதோ அல்லது ஆம்லெட் (omelet) செய்யும்போதோ வெண்ணெய் அல்லது விலங்கு கொழுப்பைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, தாவர எண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெயைப் பயன்படுத்துவது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்று நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன் பெற்றுக்கொண்டார். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் சீனிவாசன், அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# மயில்சாமி அண்ணாதுரை தலைமையில் புதிய பாடத்திட்ட வடிவமைப்புக் குழு: தமிழக அரசு உத்தரவு!



சென்னை, ஜூன். 30–

இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை தலைமையில் புதிய பாடத் திட்ட வடிவமைப்புக் குழுவை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்கான பாடத் திட்டம் படிப்படியாக மாற்றியமைக்கப்பட உள்ளது. கடந்த திமுக ஆட்சியில் இஸ்ரோ தலைவர் நாராயணன், கிரிக்கெட் வீரர் அஸ்வின், விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரன் உள்ளிட்டோர் அடங்கிய புதிய பாடத் திட்ட வடிவமைப்பு உயர்நிலைக் குழு, வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.

அந்த குழு, மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை ஆய்வு செய்தது. ஆசிரியர்கள், பெற்றோர், கல்வியாளர்கள், மாணவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும் பெற்றது. அதன் அடிப்படையில், பள்ளிக்கல்வி மேம்பாட்டுக்கான பரிந்துரைகள் மற்றும் புதிய பாடத் திட்டத்துக்கான அறிக்கையை தயாரித்து அரசிடம் வழங்கியது.

அதைத் தொடர்ந்து, முதல்கட்டமாக நடப்பு கல்வி ஆண்டில் 1 முதல் 3–ம் வகுப்பு வரை புதிய பாடத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஆட்சி மாற்றம் ஏற்பட்டு முதல்வர் விஜய் தலைமையில் தவெக அரசு பொறுப்பேற்றுள்ளது. இந்நிலையில், இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை தலைமையில் புதிய பாடத் திட்ட வடிவமைப்புக் குழுவை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக பள்ளிக்கல்வித் துறைச் செயலர் சந்திரமோகன் வெளியிட்ட அரசாணையில் கூறியுள்ளதாவது: பள்ளி பாடத் திட்டத்தை மேம்படுத்தும் வகையில் புதிய பாடத் திட்ட வடிவமைப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. இதன் தலைவராக இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை செயல்படுவார். விஞ்ஞானி த.வி. வெங்கடேஸ்வரன், சென்னை பல்கலைக்கழக இயற்பியல் துறை பேராசிரியை ரீட்டா ஜான், சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் சுதந்திரமுத்து உள்ளிட்ட 14 பேர் உறுப்பினராக இருப்பார்கள். மாநிலக் கல்வி ஆராய்ச்சி, பயிற்சி நிறுவன இயக்குநர் இக்குழுவின் உறுப்பினர் – செயலராக செயல்படுவார். உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகள் ஆகும்.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

தற்போது 1 முதல் 3–ம் வகுப்பு வரை புதிய பாடத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதால் புதிய குழு, 4–ம் வகுப்பு முதல் புதிய பாடத் திட்டத்தை தயாரித்து அரசிடம் சமர்ப்பிக்கும். குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் 4–ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை படிப்படியாக புதிய பாடத்திட்டம் பின்பற்றப்படும்.

# சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் இருவரும் 2-ந்தேதி தவெகவில் இணைவு?



சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர்

சென்னை, ஜூன். 30–

அதிமுகவை சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் அடுத்தடுத்து தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைவது எடப்பாடி பழனிசாமி மட்டுமல்லாது கட்சி தொண்டர்களையும் அதிர்ச்சியடைய செய்துள்ளது.

**அதிமுக அதிருப்தி அணி**

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தவெக, திமுகவுக்கு அடுத்து 3 வது இடத்தை அதிமுக பிடித்ததால், அக்கட்சியில் பலர் அதிருப்தி அடைந்தனர். குறிப்பாக எஸ்.பி. வேலுமணி, சி.வி.சண்முகம் மற்றும் சி. விஜயபாஸ்கர் தலைமையில் அதிமுக உறுப்பினர்கள் பிரிந்து எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான அணியை உருவாக்கினர். தங்கள் ராஜினாமா கடிதத்தையும் வழங்கினர்.

இதன் பிறகு நடந்த சமாதான பேச்சுக்கு பிறகு எஸ்.பி. வேலுமணி தலைமையில் சில உறுப்பினர்கள் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு ஆதரவாகத் திரும்பினர். எனினும் சி.வி. சண்முகம் மற்றும் சி.விஜயபாஸ்கர் இடப்பாடி பழனிசாமியை சந்திப்பதை தவிர்த்து வந்தனர்.

**ராஜினாமா**

இதற்கிடையே, அதிமுக அதிருப்தி அணியில் இருந்த மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்யபாமா மற்றும் இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களது எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்தனர்.

இதனை தொடர்ந்து, அதிமுக எம்.எல்.ஏ.க்களான சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் இருவரும் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளனர். சி.விஜயபாஸ்கர் தனது ஆதரவாளர்களுடன் நேற்று தவெகவில் இணைய உள்ளதாக கூறப்பட்டது. ஆனால் நடிகரும், இயக்குநருமாக பாக்கியராஜ் மறைவு உள்ளிட்ட காரணங்களால் இந்த நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில், தங்களது எம்.எல்.ஏ.பதவியை ராஜினாமா செய்துள்ள சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் இருவரும் நாளை மறுநாள் (2–ந்தேதி) தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இருவரும் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேலான தங்களது ஆதரவாளர்களுடன் முதல்–அமைச்சர் விஜய் முன்னிலையில் தவெகவில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது.

இதற்காக மாமல்லபுரம் அருகே உள்ள தனியார் விடுதியில் பிரமாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. முன்னாள் அமைச்சர்களான எம்.எஸ்.எம். ஆனந்தன், மற்றும் திருச்சியை சேர்ந்த வளர்மதி ஆகியோரும் தவெகவில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது.

# தமிழகத்தில் ஆவின் பாலுக்கு தட்டுப்பாடா?




சென்னை, ஜூன். 30–

ஆவின் நிறுவனம், சென்னை முழுவதும் அனைத்து வகையான பால் பாக்கெட்டுகளையும் தடையின்றி தொடர்ந்து வினியோகித்து வருகிறது. சராசரியாக சென்னையில் நாளொன்றுக்கு நுகர்வோர்களுக்கு சுமார் 14.50 லட்சம் லிட்டர் பால் சப்ளை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு விற்பனையுடன் ஒப்பிடுகை யில் 2025 ஜூன் மாதம் அன்றாடம் 14.46 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு ஜூன் மாதம் அன்றாடம் 14.82 லட்சம் லிட்டர் பால் விற்பனை நடைபெறுகிறது. இது 0.36 சதவீதம் அதிகரிப்பு ஆகும். அதாவது, பால் வினியோகம் 36 ஆயிரம் லிட்டர் அதிகரித்துள்ளது.

எந்தவொரு பால் சப்ளையும் குறைக்கப்படவில்லை. நுகர்வோர்களுக்கு பால் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதில் ஆவின் நிறுவனம் உறுதியாக உள்ளது. எனவே ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு என்பது தவறான தகவல் ஆகும். ஆவின் பால் வினியோகம் வழக்கம் போல் தொடரும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மு.க.ஸ்டாலின் தாயார் தயாளு அம்மாள் மருத்துவமனையில் அனுமதி!



சென்னை, ஜூன். 30–

மறைந்த முன்னாள் முதல்–அமைச்சர் கருணாநிதியின் மனைவியும். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினின் தாயாருமான தயாளு அம்மாள் (93) வயது முதிர்வு காரணமாக சென்னை கோபாலபுரம் இல்லத்தில் தங்கி ஓய்வு எடுத்து வருகிறார்.

அவர் அவ்வப்போது உடல் நலக்குறைவால் பாதிக்கப்படுகிறார். இதற்காக அவர், சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை எடுப்பது வழக்கம். இந்த நிலையில் தயாளு அம்மாள் நேற்றிரவு 7 மணியளவில் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டார்.

இதைத்தொடர்ந்து அவர், வழக்கமாக சிகிச்சை பெறும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தனது தாயாரின் உடல்நிலை குறித்தும், அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் டாக்டர்களிடம் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.

# "உறங்கும்போது சார்ஜ் போட வேண்டாம்": மின் ஆய்வுத்துறை அதிகாரி அறிவுறுத்தல்!



ஈரோடு, ஜூன். 30–

தமிழ்நாடு மின் ஆய்வுத்துறையின் ஈரோடு மின் ஆய்வாளர் உசேன்பாஷா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:–

தேசிய மின்சார பாதுகாப்பு தினம் ஜூன் 26–ந் தேதி கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி ஜூன் 26–ந் தேதி முதல் ஜூலை 2–ந் தேதி வரை தேசிய மின்சார பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நிகழ்வையொட்டி பொதுமக்கள் மின்சார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அதன்படி, மின்சார பிளக் சாக்கெட்டுகளில் விரல்கள் அல்லது வேறு எந்த மின் கடத்தும் பொருட்களையும் நுழைக்கக்கூடாது. மின் சாதனங்களில் இருந்து தண்ணீரை விலக்கி வைக்க வேண்டும். ஒரு பிளக்கை அகற்றும்போதும், சொருகும்போதும் மின்சாரத்தை துண்டித்த பிறகே செய்ய வேண்டும். அறுந்த மின் கம்பிகளை தொடக்கூடாது.

அதன்படி, மின்சார பிளக் சாக்கெட்டுகளில் விரல்கள் அல்லது வேறு எந்த மின் கடத்தும் பொருட்களையும் நுழைக்கக்கூடாது. மின் சாதனங்களில் இருந்து தண்ணீரை விலக்கி வைக்க வேண்டும். ஒரு பிளக்கை அகற்றும்போதும், சொருகும்போதும் மின்சாரத்தை துண்டித்த பிறகே செய்ய வேண்டும். அறுந்த மின் கம்பிகளை தொடக்கூடாது.

பொதுமக்கள் உறங்கும்போது உங்கள் மின் சாதனங்களுக்கு சார்ஜ் போட வேண்டாம். போலியான சார்ஜர்கள் வாங்கவோ, பயன்படுத்தவோ வேண்டாம். ஈரத்துணிகளால் மின் சாதனங்களை துடைக்கக்கூடாது. பழைய பழுதடைந்த மின்ஒயர், கம்பிகளை பயன்படுத்தி மின் இணைப்பு கொடுக்கக்கூடாது. மின் சாதனங்கள் இணைக்கும் பிளக் சாக்கெட்டு இணைப்புகளில் "எர்த்" இணைப்பு அவசியம் செய்ய வேண்டும். குழந்தைகளின் கையில் எட்டும் வகையில் மின் சாதனங்கள் பொருத்தவோ, வைக்கவோ கூடாது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## பி.எஸ்.என்.எல். 100 காலியிடங்கள்!

**BSNL Recruitment 2026**

- Vacancy: 100
- Post Name: Junior Telecom Officer (Telecom)
- Qualification: B.E/B.Tech, M.Sc
- Selection Process: Online Test, Certificate Verification

நிறுவனத்தின் பெயர்: BSNL பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட்

அறிவிப்பு எண்: BSNLCO–11/12(11)/1/2026–RECTT–CO

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி அமைப்பு: நிரந்தரப் பணி

மொத்தக் காலிப்பணியிடங்கள்: 100 ஜூனியர் டெலிகாம் அதிகாரி (டெலிகாம்) பணியிடங்கள்

பணியிடம்: இந்தியா முழுவதும்

விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 04.06.2026 அன்று காலை 10.00 மணி

விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 03.07.2026 அன்று காலை 10.00 மணி

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://externalexam.bsnl.co.in/

# பாலியல் குற்றவாளிகளை 8 பிரிவுகளாக வகைப்படுத்தி கண்காணிக்கும் தமிழக போலீஸ்


சென்னை, ஜூன். 30–

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக குற்றங்களே நடைபெறாத ஒரு தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதை. தன்னுடைய கனவாக நினைத்து முதல்–அமைச்சர் விஜய் செயல்பட்டு வருகிறார்.



அவரது கனவை நனவாக்கும் வகையில் தென்மாவட்டங்களில் பாலியல் குற்றவாளிகளை ஒழித்துக்கட்டுவதற்காக ஒரு சிறப்பு அதிரடி திட்டம் ஒன்றை, தென்மண்டல ஐ.ஜி. விஜயேந்திரபிதாரி தொடங்கி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அந்த திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படும் என்று டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் அறிவித்துள்ளார். அதற்கான நடவடிக்கையும் தொடங்கிவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

# டிஎன்பிஎஸ்சி குரூப்-1 தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்!



சென்னை, ஜூன். 30–

26 காலிப் பணியிடங்களை நிரப்ப நடத்தப்பட உள்ள குரூப்–1 முதல்நிலைத் தேர்வுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது. டிஎன்பிஎஸ்சி கூறியிருப்பதாவது: துணை ஆட்சியர், வணிகவரி உதவி ஆணையர், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர், பத்திரப் பதிவு மாவட்ட பதிவாளர், தொழிலாளர் உதவி ஆணையர் ஆகிய பதவிகளில் 26 காலியிங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. இதற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு ஜூன் 30–ம் தேதி (இன்று) தொடங்கி ஜூலை 29–ம் தேதி முடிவடையும். முதல்நிலைத் தேர்வு செப்டம்பர் 6–ம் தேதி அன்று நடைபெறும். குரூப்–1 தேர்வை பட்டதாரிகள் எழுத தகுதியுடையவர் ஆவர். வயது வரம்பு பொதுப்பிரினருக்கு 34 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கும் (பிசி, எம்பிசி, எஸ்சி, எஸ்டி) ஆதரவற்ற விதவைகளுக்கும் வயது வரம்பில் 5 ஆண்டுகள் தளர்வு அளிக்கப்படும். மொத்தம் 26 காலிப் பணியிடங்களை நிரப்ப நடத்தப்பட உள்ள குரூப்–1 முதல்நிலைத் தேர்வுக்கு ஜூன் 30 முதல் விண்ணப்பிக்கலாம் என டிஎன்பிஎஸ்சி அறிவித்து ள்ளது. 26 காலிப்பணியிடங்கள் மிகவும் குறைவாக இருப்பதாக தேர்வர்கள் அதிருப்தி தெரிவித்த நிலையில், விரைவில் காலியிடங்கள் அதிகரிக்கப்படும் என்று டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்



# 12 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்; த.வெ.க., தலைமை ரகசிய இலக்கு!



சென்னை, ஜூன். 30–

தமிழக வெற்றிக் கழக அரசுக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கும் வகையில், 12 சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த, ஆளுங்கட்சி தலைமை திட்டமிட்டு காய் நகர்த்தி வருகிறது.

சட்டசபை தேர்தலில், த.வெ.க., 108 தொகுதிகளில் வெற்றி பெற்று, முதல்வர் விஜய் தலைமையில் ஆட்சி அமைத்துள்ளது. திருச்சி கிழக்கு, சென்னை பெரம்பூர் தொகுதி களில் வெற்றி பெற்ற விஜய், திருச்சி கிழக்கு எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்தார்.

சபாநாயகராக த.வெ.க.,வைச் சேர்ந்த பிரபாகர் பொறுப்பேற்றார். இதனால், சட்டசபையில் த.வெ.க., – எம்.எல்.ஏ.,க்களின் பலம் 106 ஆக குறைந்துள்ளது. இதைத்தொடர்ந்து, அ.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்கள் நான்கு பேர் பதவியை ராஜினாமா செய்து, த.வெ.க.,வில் இணைந்தனர்.

மேலும், அ.தி.மு.க.,வைச் சேர்ந்த புதுக்கோட்டை விஜயபாஸ்கரும், கரூர் விஜயபாஸ்கரும் எம்.எல்.ஏ., பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர். இதனால், ஏழு சட்டசபை தொகுதி களுக்கு இடைத்தேர்தல் நடப்பது உறுதியாகியுள்ளது.

மேலும், வட மாவட்ட ங்களைச் சேர்ந்த நான்கு அ.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்களை ராஜினாமா செய்ய வைத்து, 12 சட்டசபை தொகு திகளுக்கு இடைத்தேர்தல் நடத்த, த.வெ.க., தலைமை வியூகம் வகுத்து வருகிறது.

அது மட்டுமின்றி, தி.மு.க.,வில் அதிருப்தியில் உள்ள நான்கு எம்.எல்.ஏ., க்களை இழுக்கவும், அவர்களை ராஜினாமா செய்ய வைக்கவும் ரகசிய பேச்சு நடத்தி வருகிறது. அவ்வாறு நடந்தால், 16 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தும் நிலை ஏற்படும்.

அதாவது, 12 அல்லது 16 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடந்தால், அதில் த.வெ.க., முழுமையாக வெற்றி பெறும் என்றும், கூட்டணி கட்சிகளின் ஆதரவின்றி, ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆட்சி நடக்கும் என்றும், முதல்வர் விஜயின் ஆஸ்தான ஜோதிடர் கூறியுள்ளதாக தெரிகிறது.

# தமிழக காங்., தலைவர் பதவியேற்பு; சிதம்பரம், கார்த்தி புறக்கணிப்பு!




சென்னை, ஜூன். 30–

தமிழக காங்., தலைவராக நியமிக்கப்பட்டுள்ள விருது நகர் எம்.பி., மாணிக்கம் தாகூர் பதவியேற்பு விழா, சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று நடந்தது.

இதில், முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம், அவரது மகன் கார்த்தி ஆகியோர் பங்கேற்கவில்லை. மாணிக்கம் தாகூர் நியமனத்தை விரும்பாததால், அவர்கள் வரவில்லை என கூறப்படுகிறது. இதனிடையே, தமிழக காங்., தலைவராக கார்த்தி நியமிக்கப்படாததை கண்டித்து, அக்கட்சியின் விவசாய அணியின் மாநில பொதுச்செயலர் ராஜன், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

மாணிக்கம் தாகூர் பேசியதாவது: கட்சி வலிமை பெற, அனைத்து தலைவர்களின் ஆதரவும் தேவை. அனைவரும் 'ஈகோ'வை விடுத்து ஒருமித்த கருத்துடன் செயல்பட வேண்டும். முதல்வர் விஜய்க்கு 35 சதவீதம் ஆதரவு என்றால், ராகுலுக்கு 60 சதவீதம் ஆதரவு உள்ளது. முதல்வர் விஜயை நம்பி த.வெ.க., வென்றது போல, ராகுலை நம்பி காங்கிரசை வெற்றி பெற வைக்க வேண்டும். இனி, எம்.எல்.ஏ., – எம்.பி., கவுன்சிலர்கள் போன்ற பதவிகளை பெற, பணம் தேவையில்லை. உழைப்பவர்களுக்கு பதவி கிடைக்கும். ராகுல் பிரதம ராகும் போது, தமிழகத்தில் நீட் தேர்வு ரத்து, காவிரி நீர் பிரச்னைக்கு தீர்வு, மேகதாது அணை கட்ட தடை, மீனவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பு, தமிழகத்திற்கு நிதி பகிர்வு ஆகிய ஐந்து அம்ச திட்டங்கள் நிறைவேற்றப்படும். உள்ளாட்சி தேர்தலில் த.வெ.க., கூட்டணி தொடரும். இவ்வாறு பேசினார். இதற்கிடையில், தமிழக காங், முன்னாள் தலைவர் அழகிரி, செய்தியாளர்களிடம் கூறுகையில், ''மாநில தலைவர் பதவியிலிருந்து மாற்றப்பட்டதால், செல்வப்பெருந்தகை தி.மு.க.,வில் சேரமாட்டார்,'' என்றார்.

**செல்வப்பெருந்தகை தி.மு.க.,வில் சேருவாரா?**

தமிழக காங், முன்னாள் தலைவர் அழகிரி செய்தியாளர்களிடம் கூறுகையில், ''மாநில தலைவர் பதவியிலிருந்து மாற்றப்பட்டதால், செல்வப்பெருந்தகை தி.மு.க.,வில் சேரமாட்டார்,'' என்றார்.

# எஸ்.டி.பி.ஐ. வடக்கு மாவட்ட பயிலரங்கு நிகழ்ச்சி!




திருப்பூர், ஜூன் 30–

எஸ்டிபிஐ கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டம் சார்பில் அரசியல் பயிலரங்க நிகழ்ச்சி காங்கயம் ரோடு தனியார் திருமண மஹாலில் மாவட்ட தலைவர் பஷீர் அகமது தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட பொதுச் செயலாளர் அப்துல் வஹாப், மாவட்ட பொருளாளர் ஜாபர் அஹமது வரவேற்றனர் மாநில பொதுச் செயலாளர் அகமது நவவி சிறப்புரையாற்றினார். இதில் ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் சமீருல்லா. உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர் மாவட்ட செயலாளர் இதயத்துல்லா நன்றியுரை ஆற்றினார்.

# தமிழ்நாட்டில் ஸ்பைஸ்ஜெட் சேவைக்கு நிரந்தர முற்றுப்புள்ளி!



சென்னை, ஜூன். 30–

ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாகவே கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது. இதனால், அந்த நிறுவனத்தின் சொந்தப் பயன்பாட்டில் இருந்த விமானங்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது.

விமானங்களின் எண்ணிக்கை குறைந்ததால், லாபம் குறைவாக உள்ள வழித்தடங்களையும், செயல்பாட்டுச் செலவு அதிகமாக உள்ள வழித்தட ங்களையும் ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் கைவிட்டு வருகிறது. இதன்காரணமாக மதுரை, கோவையில் இருந்து உள்நாட்டு நகரங்களுக்கான சேவைகள் படிப்படியாக குறைக்கப்பட்டு முழுவதுமாக நிறுத்தப்பட்டன.

மதுரையில் இருந்து துபாய்க்கு இயக்கப்பட்ட விமானமும் 4 மாதங்களுக்கு முன் நிறுத்தப்பட்டது. மேலும் சென்னையில் இருந்து கர்நாடக மாநிலம் ஷிவமொக்காவுக்கு பெயரவிற்கு மட்டும் தினசரி விமானங்கள் இயக்கப்பட்டு வந்த சேவைகளையும் ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் சமீபத்தில் நிறுத்தி உள்ளது.

# அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜூன். 30–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,160 குறைந்து ரூ.1,04,240–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.270 குறைந்து ரூ.13,030–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போல வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.240–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# இனி போன் நம்பர் தேவையில்லை..! வாட்ஸ் அப்பில் புது வசதி..!!


சமூக வலைத்தளங்களில் முன்னணி வகிக்கும் செயலியாக வாட்ஸ் அப் உள்ளது. வாட்ஸ் அப் பயன்படுத்தாத ஸ்மார்ட் போன் யூசர்களே இல்லை என சொல்லும் அளவிற்கு தற்போது அதன் பயன்பாடு அதிகரித்துள்ளது. இந்தியாவில் மட்டும் 50 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வாட்ஸ் அப் பயன்படுத்தி வருகிறார்கள். வாட்ஸ் அப் நிறுவனம் சந்தையில் போட்டியை சமாளிக்கவும் பயனர்களை தக்க வைக்கவும் அவ்வப்போது புதிய அப்டேட்களை வெளியிட்டு வருகிறது.

**போன் நம்பர் இல்லாமல் யூசர் நேம்**

அந்த வகையில் பயனர்கள் நீண்ட காலம் எதிர்பார்த்த ஒரு அப்டேட் வெளியாகியுள்ளது. அதாவது வாட்ஸ் அப்பில், இனி போன் நம்பர் இல்லாமல் யூசர் நேம் வைத்தே பயன்படுத்தலாம். பயனர்களின் தனிப்பட்ட விவரங்களை பாதுகாக்கும் வகையில் இந்த வசதி அறிமுகம் ஆக உள்ளது. இந்த வாரத்தில் இருந்தே பயனர்கள் விருப்பமான பெயர்களை முன்பதிவு செய்யலாம் என்றாலும், இந்த வருட இறுதிக்குள் அனைத்து பயனர்களுக்கும் இந்த வசதி செயல்பாட்டிற்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புதிய அம்சம்**

வாட்ஸ் அப்பில் Settings > Account > Username வழியாக பெயரை ரிசர்வ் செய்யலாம். இந்த புதிய அம்சம் அறிமுகமான பிறகு, பயனர் பயனர்பெயர் (Username) வசதியை பயனர் பயன்படுத்தியிருந்தால், முதல் முறையாக யாராவது செய்தி அனுப்பும்போது பயனரின் தொலைபேசி எண் மற்றவர்களுக்கு தெரியாது. பயனர்களின் தனியுரிமையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வாட்ஸ்அப் கொண்டு வரவுள்ள புதிய அம்சமாக இது கருதப்படுகிறது.



காங்கிரஸ் புதிய தலைவர் பதவியேற்பு விழாவில்...
இவ்வளவு பெரிய கூட்டமா..?
நம்பவே முடியவில்லையே..!
வாழ்த்துக்கள்...!
ஆமா..
இத்தனை நாள் எங்க சார் போனீங்க..?

முனைவர்
*வைகைச்செல்வன்*
முன்னாள் அமைச்சர்

# ஜூலை 10, 11-ம் தேதிகளில் கரூர் செல்கிறார் முதல்-அமைச்சர் விஜய்!



சென்னை, ஜூன். 30–

வருகிற 10 மற்றும் 11–ம் தேதி முதல்–அமைச்சர் விஜய் கரூர் செல்கிறார். 2 நாட்கள் பயணமாக கரூர் செல்லும் முதல்–அமைச்சர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவிக்க உள்ளார். மேலும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று நலத்திட்ட பணிகளை தொடங்கி வைக்க உள்ளார்.

கரூரை தொடர்ந்து மற்ற மாவட்டங்களுக்கும் விஜய் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார். தேர்தல் வெற்றிக்காக அவர் மக்களுக்கு நன்றி கூறுகிறார். தொடர்ந்து அந்தந்த மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் நடக்கும் அரசு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று, புதிய திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

# தமிழகத்தில் காலியாக இருக்கும் தொகுதி எண்ணிக்கை 7 ஆக அதிகரிப்பு!




சென்னை, ஜூன். 30–

எம்.ஆர்.விஜயபாஸ்கர் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து, கரூர் தொகுதி காலியானதாக சட்டசபை செயலகம் அறிவித்துள்ளது. கரூர் தொகுதி அதிமுக எம்எல்ஏவான எம்.ஆர்.விஜயபாஸ்கர் நேற்று காலை தலைமை செயலகத்திற்கு வந்தார். சபாநாயகர் பிரபாகரை சந்தித்து, தன் பதவியை ராஜினாமா செய்வதாக எழுத்துப்பூர்வ கடிதம் அளித்தார். அப்போது, சட்டசபை செயலர் சாந்தியும் உடனிருந்தார். அவர் அளித்த ராஜினாமா கடிதத்தை ஏற்றுக் கொண்டதாக சபாநாயகர் பிரபாகர் அறிவித்தார்.

இந்நிலையில் இன்று கரூர் தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் தமிழகத்தில் காலியாக உள்ள சட்டசபை தொகுதிகளின் எண்ணிக்கை தற்போது 7 ஆக உயர்ந்துள்ளது. அதன் விவரம்;

1.திருச்சி கிழக்கு
2.மதுராந்தகம்
3.தாராபுரம்
4.பெருந்துறை
5.அம்பாசமுத்திரம்
6.விராலிமலை
7.கரூர்

இந்த தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சேகர்பாபு, மேயர் பிரியா உள்பட 200-க்கும் மேற்பட்டோர் மீது வழக்குப்பதிவு!




சென்னை, ஜூன். 30–

போதைப் பொருள் விவகாரத்தில் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி, சென்னை எழும்பூரில் போராட்டம் நடத்திய முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்பட 233 பேர் மீது 3 பிரிவுகளில் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதைபோல, புரசைவாக்கத்தில் போராட்டம் நடத்திய முன்னாள் அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா உள்பட 200–க்கும் மேற்பட்டோர் மீதும் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# பெட்ரோல், டீசல் மீதான கட்டுப்பாடுகள் நீக்கம்!




டெல்லி, ஜூன். 30–

மத்திய கிழக்கில் நிலவி வந்த போர் காரணமாக சர்வதேச அளவில் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அதன்படி, இந்தியாவிலும் பெட்ரோல், டீசலுக்கு தடுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவானது.

இதனால், பெட்ரோல், டீசல் விற்பனையில் மத்திய அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை கொண்டு வந்தது. அதன்படி, வணிக பயன்பாட்டுகளுக்காக சில்லறை விற்பனை நிலையங்களில் மொத்தமாக பெட்ரோல், டீசல் வாங்க கடந்த 13ம் தேதி முதல் மத்திய அரசு தடை விதித்தது. இந்த தடை 90 நாட்களுக்கு அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டது. மேலும், நாள் ஒன்றுக்கு ஒரு வாகனத்தின் எரிபொருள் டேங்கில் 200 லிட்டருக்குமேல் எரிபொருள் நிரப்பக்கூடாது என்று உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த எரிபொருளை மறுவிற்பனை செய்யக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பெட்ரோல், டீசலை அதிக அளவில் வாங்கி அதை கள்ளச்சந்தையில் விற்பனை தடுக்கும் வகையிலும், தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையிலும் மத்திய அரசு இந்த நடவடிக்கை மேற்கொண்டது.

இந்நிலையில், பெட்ரோல், டீசல் விற்பனைக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஜூலை 1ம் தேதி (நாளை) முதல் நீக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. போர் பதற்றம் தணிந்து பெட்ரோல், டீசல் விநியோகம் தடையின்றி இருப்பதால் கட்டுப்பாடுகளை மத்திய அரசு நீக்கியுள்ளது.

# தமிழ்நாட்டுக்கு 9 ஆண்டுகளில் கிடைத்த ஜி.எஸ்.டி. வசூல் விவரம் ..!




புதுடெல்லி, ஜூன். 30–

தமிழ்நாட்டுக்கு 9 ஆண்டுகளில் கிடைத்த ஜி.எஸ்.டி. வசூல் எவ்வளவு? என்ற விவரம் வெளியாகி உள்ளது.

இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி எனப்படும் ஜி.எஸ்.டி. அறிமுகம் செய்யப்பட்டு 9 ஆண்டுகள் முடிந்துள்ளன. நாளை, ஜி.எஸ்.டி. 10–வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இதுவரை ரூ.144.6 லட்சம் கோடி ஜி.எஸ்.டி. வசூல் செய்யப்பட்டுள்ளது.

இதில், கடந்த 9 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ரூ.8,55,389 கோடி ஜி.எஸ்.டி. வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தொகை முழுவதும் தமிழக அரசுக்கு கிடைத்து விடாது. ஜி.எஸ்.டி. வரி இரண்டு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனைக்கு விதிக்கப்படும் வரி, மத்திய சி.ஜி.எஸ்.டி. மற்றும் மாநில எஸ்.ஜி.எஸ்.டி. என சமமாக பிரிக்கப்படுகிறது. இதில் எஸ்.ஜி.எஸ்.டி. பகுதி தமிழக அரசுக்கும், சி.ஜி.எஸ்.டி. பகுதி மத்திய அரசுக்கும் செல்கிறது.

உதாரணமாக ரூ.100 ஜி.எஸ்.டி. வசூலானால், சுமார் ரூ.50 மாநில அரசுக்கும், ரூ.50 மத்திய அரசுக்கும் செல்லும். மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகத்திற்கு விதிக்கப்படும் ஐ.ஜி.எஸ்.டி. முதலில் மத்திய அரசால் வசூலிக்கப்பட்டு, பின்னர் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படு கிறது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் வசூலான ரூ.8,55,389 கோடியில் சுமார் பாதி அளவான ரூ.4.25 லட்சம் கோடி (எஸ்.ஜி.எஸ்.டி) வருவாயாக தமிழக அரசுக்கு கிடைத்திருக்கும். இதனுடன் ஐ.ஜி.எஸ்.டி பங்கீட்டின் மூலம் கிடைத்த தொகையையும் சேர்த்தால், தமிழக அரசுக்கு கிடைத்த மொத்த ஜி.எஸ்.டி. வருவாய் இதைவிட கூடுதலாக இருக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இதே கணக்கீட்டின் அடிப்படையில்தான் மற்ற மாநிலங்களுக்கும் வருவாய் கிடைக்கும்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020